தலைமேற்கொண்டு சுயநயமும் இறுமாப்புங் கொள்ளா தலைவணக்கத்துடன் இஸ்லாமிய சகோதரத்துவத்து காகவும் சன்மார்க்கப் பரவுதலுக்காகவும் ஒரு மனதா ஒத்துழைத்து உலகத்தவரெல்லாம் நம்மை நன்கு ம கும்படி நடந்துகொள்ளவேண்டும். இவ்வாறு நாம் நடக் முன்வருவோமாயின் நம்முஸ்லிம்களுக்கு, "அவர்கள் மே கொள்ளப்பட்டுப் பிறகு மேற்கொள்வர்," என்னும் அரு வாக்கின்படி ஜயமுண்டாகும். அப்படிப்பட்ட ஜயமும் இ னும் "சில வருஷங்களில்" கைகூடும்படி எல்லாம் வல் இறைவனைச்சிந்தித்து வந்திப்போமாக. ஆமீன்.

கமலம்-2. 1-3-20 இதழ்

முபஸ்ஸிலன்

இஷாஅத்தே இஸ்லாம்

"(மனிதர்களுக்குத்) தப்பானதைத் தடுத்துச் சரி னதை விதிக்கவும், (அவர்களை) நன்மையானவழியில் அ க்கவும் உங்களில் ஒரு வர்க்கத்தார் இருப்பது அவசிய இவர்கள்தாம் ஜயமுடையவர்க ளாவார்கள்,"—(அல் ஆன், 3:103)

இவ்வாக்கியம் எமது சம்பூரணமான பரிசுத்தம் நி ந்த குர்ஆன் ஷரீபு வேதத்தின் ஒரு சிறந்த ஆயத்தா "மதசம்பந்தமாகக் கட்டாயம் வேண் டாம்," (2:2 என்று எமது இறைவன் அவ்வேதத்திலேயே விதித்து ளான். இக்கட்டளையின்படி இதரமதஸ்தர்கள் இஸ்லாத் வரும்படி வற்புறுத்தா விடினும் இச் சன்மார்க்கத் இலேசான உண்மைப் பிரகாசங்களைப் பரப்பி இஷா தே இஸ்லாம் (சன்மார்க்கப் பரவுதல்) செய்வதற்கு ந

குள் ஒரு கூட்டத்தார் இருக்கவேண்டியது அத்தியாவசிய மென்பது நாம் மேலே சொன்ன திருவாக்கியத்தால் (3: 103) ஏற்படுகிறது. எமது சன்மார்க்கத்தில் இஷா அத்தே இஸ்லாம் செய்ய இதர மதங்களில் இருப்பதுபோல் பாதிரிமார்களும் குருமார்களும் இருக்கத் தேவையில்லை. இச் சன்மார்க்கம் மனிதரின் யுக்திக்கும் புத்திக்கும் பொருந்தும்படி இதரமார்க்கங்களைவிட அதிலேசாய் அமைக்கப் பட்டிருப்பதனால் ஒவ்வொரு முஸ்லிமும் தன்னாலியன்ற மட்டும் இஷா அத்தே இஸ்லாம் செய்தல் வேண்டும்.

நாம் இதன் தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கும் ஆயத் தானது இதற்கு முற்காலத்தில் எவ்வளவு குறைவாய்க் கவனிக்கப்பட்டுக் கைவிடப்பட் டிருந்தபோதிலும் இக்காலத் தில் அத்திருவாக்கியத்தில் சொன்னபடி இஷா அத்தே இஸ்லாம் செய்ய வேண்டியது நம்முடைய உயிர் வாழ்க் கைக்கு அத்தியாவசியமா யிருக்கிறது. திருக்குர்ஆனின் முழுக்கருத்தின்படி ஆராயுங்கால் எப்படிப்பட்டமனிதரா யிருப்பினும் முன்னுக்குவரப் பாடுபடாமல் அவர் சும்மா இருக்கும் பக்ஷத்தில் தாம் இருந்த இடத்தையும் ஸ்திரப் படுத்திக்கொள்ள முடியாமல் கீழே நழுவத்தான் நேரிடும்; ஆண்டவன் மனிதனைப் படைத்திருக்கும் அந்த இயற்கைத் தன்மையை நாம் உற்று நோக்கின் அம்மனிதன் மேலே போகப் பாடுபடும் பக்ஷத்தில் அவன் க்ஷேமத்துடன் முன்னுக்கு வருவான் என்பது தெளிவாகின்றது. முன்னுக்குவர நாம் பாடுபடாமல் சோம்பித்திரிவோமாயின் பின் னுக்குப்போவது நிச்சயம். இந்நியதியின்படி முஸ்லிம்கள் இஷா அத்தே இஸ்லாம் துறையில் சன்மார்க்கப் பரவுதலுக்காகப் பாடுபட்ட நாள் வரையில் அவர்கள் முன்னுக்கு வந்துகொண் டிருந்தார்கள் ; என்று முதல் இஷா அத்தே

இஸ்லாம் வேலையை நம்முஸ்லிம்கள் கைநழுவவிட்டு விட்டார்களோ அன்று முதலே இஸ்லாமும் தன் உச்ச ஸ்தானத்தைவிட்டு உருள ஆரம்பித்துவிட்டது.

இவ்வாறு உருண்டுகொண்டே தாழ்ந்துவந்த நம் மார்க்கம் இப்போது தன் உயிருக்கே மன்றாடும்படியான தத்தளிப்பு நிலைமைக்கு வந்துவிட்டது. இம்மார்க்கத்தின் மென்னியில் காலைவைத்து அதன் உயிரை அடியோடுபோக்கிவிட வேண்டுமென்று பலர்பாடுபடுகின்றனர். இப்படிப்பட்ட பிராண அவஸ்தையானவேளையில் நம் 400,000,000 முஸ்லிம்களை மனம் கலங்கவேண்டாமென்று நமது கண்ணீரைத் துடைத்துத் தைரியம் ஊட்ட நமக்கென்று ஓர் இஸ்லாமிய அரசு தலைமை வகித்தில்லை. இப்போது நாம் அடிவானத்தில் கருமேகத்தைக்காண்கின்றோம்; இம்மேகம் மழைபொழிய ஆரம்பித்தால் நமது தீனுல் இஸ்லாத்துக்கே என்ன கேடு வருமோவென்று நாம் அஞ்ச வேண்டியிருக்கிறது. "இன்னும் சில வருஷங்களுக்குள்" நமக்கும் நமது சன்மார்க்கத்துக்கும் மேன்மையைத் தரும்படி எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலாவிடத்தில் வணங்கிக் குறையிரப்போமாக. இப்போது சில வருஷங்களாய் மிகப்பெரிய மகாயுத்தமொன்று நடந்துவந்ததைக் கண்டிருக்கிறோம். இதன் முடிவில் மிகப் பெரிய கதோலிக் கிரிஸ்தவ ராஜ்யமொன்று சிதறுண்டு சின்னாபின்னப்பட்டுப்போனதையும் நாம் கண்ணாரக் கண்டுகொண்டோம். இன்னும், நமது இஸ்லாம் ராஜ்யத்தின்கதியோ எல்லோரும் பரிதபிக்கத் தக்க நிலைமையில் தன் ஆருயிருக்காக ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இவ்வாறு ஆண்டவன் செய்திருப்பதிலும் ஒருவகைக் கருத்து அமைந்துதானிருக்கிறது. நாம் முற்காலத்தில் ஏன் உச்சநிலையை யடைந்திருந்

தோம், ஏன் இப்போதைக்கு 300 வருஷங்களுக்கு முன் முதல் கீழே நழுவ ஆரம்பித்துவிட்டோம் என்று நிதானத்துடன் ஆராய்வோமாயின், இஷா அத்தே இஸ்லாம் செய்து எல்லோருக்கும் இச்சன்மார்க்கத்தின் உண்மைகளை விளக்கிக் காட்டினகாலம் வரையில் நம் சகோதரர்கள் உச்ச நிலைமையிலிருந்து வந்தார்களென்றும் சன்மார்க்கப்பரவுதலை என்று முதல் விட்டு விட்டார்களோ அன்று முதலே இம்மார்க்கம் தானே நழுவ ஆரம்பித்து விட்டதென்றும் செவ்வனே தெரிந்துகொள்வோம். இதனால் தான் ஆண்டவன், "மனிதர்களுக்குத் தப்பானதைத் தடுத்துச் சரியானதை விதிக்கவும், அவர்களை நன்மையான வழியில் அழைக்கவும் உங்களில் ஒருவர்க்கத்தார் இருப்பது அவசியம்; இவர்கள் தாம் ஜயமுடையவர்களாவார்கள்," என்று கூறியுள்ளான்.

முற்காலங்களில் நமது முன்னோர் துன்பத்தையும் துயரையும் இன்பமுடன் சகித்துக்கொண்டு இஸ்லாத்தின் பரவுதலுக்காக இனியில்லா ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் அநேக எதிரிகளை எதிர்த்து ஜயபேரிகை கொட்டி வெற்றிக்கொடி நாட்டினார்கள். இஸ்லாத்தின் உண்மை ஞான ஒளியை உலகமுழுவதும் பரப்புவதற்காகத் தம் உயிரையும் ஒரு பொருளாயெண்ணாமல் ஜிஹாது செய்துவந்தனர். ஜிஹாதென்பது இதரமதஸ்தருடன் கத்தி யெடுத்து வீண் சண்டை செய்து விரோதத்தை உண்டுபண்ணிக் கொள்வதென்பது கருத்தன்று. நம்மைப் பிறர் துன்பம் செய்ய எண்ணி நம்மீது படையெடுத்துச் சண்டைக்கு வரும்போது தற்காப்புச் செய்துகொள்வதற்கு வேண்டிய அளவுதான் நாம் கத்தியெடுத்து ஜிஹாது செய்யவேண்டும். இதர மதத்தினர் சும்மா இருக்கும்போது அவருடன் நாம் கத்தியெடுத்து ஜிஹாதுசெய்து இஷா அத்தே

இஸ்லாம் செய்வது கூடாது. ஆதலின் கத்தி யெடுக்காமல் செய்யும் பெரிய ஜிஹாதே கபீரை நாம் எக்காலத்திலும் ஓய்வில்லாமல் செய்துவரலாம். இதுதான் திருக்குர்ஆனை நம் கையில் வைத்துக்கொண்டு இஸ்லாத்தின் உண்மைக் கொள்கைகளை எல்லோருக்கும் எடுத்துச் சொல்லுதலாகும். இதை இன்னார்தான் இன்னகாலத்தில் இன்ன விதமாய்ச் செய்ய வேண்டுமென்று ஒருகட்டுப்பாடு இல்லை. ஒவ்வொரு முஸ்லிமும் தன்னாலியன்ற மட்டும் ஆயுள் முழுவதும் இந்த ஜிஹாதே கபீரென்னும் இஷாஅத்தே இஸ்லாம் வேலையைச் செய்து வரலாம். இஸ்லாத்தின் உண்மையான இலேசுக் கொள்கைகளை இவ்வுலகம் இப்போது ஏற்றுக்கொள்ளப் பக்குவமடைந்திருக்கிறது. ஆனால் இஸ்லாத்தின் பரவுதலுக்காக உழைப்பவர்கள்தான் அதிகம் பேர் காணப்படவில்லை. இஷாஅத்தே இஸ்லாத்துக்காக உழைக்க எவ்வளவுக் கெவ்வளவு நாம் முன்வருகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு சன்மார்க்கப் பரவுதலும் வெற்றியடையும். 1300 வருஷங்களுக்கு முன் அஸ்ஹாபுமார்கள் இஷாஅத்தே இஸ்லாத்துக்காக உழைத்ததுபோல் இப்போதும் லில்லாவுக்காக உழைக்கச் சிலர் தம் சொந்த ஊரையும் உற்றார் பெற்றாரையும் விட்டு அயல் தேசங்களுக்குச் சென்று இஷா அத்தே இஸ்லாம் செய்துவருகின்றனர். அவர்கள் இஸ்லாத்துக்காகவும் லில்லாவுக்காகவும் தங்களுடைய உடல் பொருள் ஆவியை யெல்லாம் தத்தம் செய்திருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா? அவர்களைப்போல் நாம் ஒவ்வொருவரும் இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டாமா? நமக்கு நமது இஸ்லாத்தைக்காட்டிலும் வேறொன்று சிறந்ததென்று நம்புகிறீர்கள்? நமக்கு மனைவி யில்லாவிடின் மணம் செய்து

கொள்ளலாம்; பிள்ளையில்லாவிடின் பெற்றுக்கொள்ளலாம்; சொத்தில்லாவிடின் சம்பாதித்துக்கொள்ளலாம். ஆனால் நமக்கு தீனுல் இஸ்லாம் என்னும் இச்சன்மார்க்கம் இல்லாவிடின் வேறு என்ன இருந்துதான் என்னபயன்? இப்போது இஷா அத்தே இஸ்லாம் செய்து தீனுல் இஸ்லாத்தை உச்சநிலைக்குக் கொண்டு வருவீரேல் நமது சந்ததியில் வரப்போகிறவர்கள் இஸ்லாத்தில் இருப்பார்கள். இன்றேல் நமது இஸ்லாம் நசித்துப்போய் நமக்குப் பின்வரும் வாரிஸுகளும் நிச்சயமாய் இதரமதத்தில் சேர்ந்து விடும்படி அபாயம் நேரிடும். அந்தோ பரிதாபம்! அப்படிப்பட்ட தாழ்மையான நிலைமைக்கு நமது சத்திய சன்மார்க்கம் வந்துவிடாமல் ஆண்டவனும் துணைபுரிய வேண்டும்; நாமும் தூண்டுதல் செய்தல் வேண்டும். இக்காலத்தில் இஸ்லாத்தின் நிலைமை என்ன கதியிலிருக்கிறதென்று உணர்ந்துகொள்ள மனமில்லாமலும் வழியில்லாமலும் இருக்கும் சில மனிதர்கள் தவிர ஏனையோரெல்லாம் இஸ்லாத்தின் க்ஷேமத்தின் மீது நாட்டம் வைத்துத் தமது கண்ணால் இரத்தம் வடித்துக்கொண்டு தமது உடல் பொருள் ஆவியையும் தத்தம் செய்ய ஆயத்தமாயிருக்கிறார்கள்.

•ஜனாப் காஜா கமாலுத்தீன் சாகிபும் மௌல்வி ஸதருத்தீன் சாகிபும் (இவர்களுக்கு இறைவன் துணைபுரிவானாக) இங்கிலாந்தில் தன்னந்தனியே இஷாஅத்தே இஸ்லாம் செய்து வருகின்றனர். இவர்கள் மட்டும் இவ்வாறு உழைக்கும்போது நாம் மட்டும் பராமுகம் செய்தவர்போல் பாராபக்ஷமாயிருக்கலாமா? நம்மாலியன்ற உதவியை இவர்களுக்கு நாம் செய்யவேண்டாமா? இங்கிலாந்தில் மட்டும் இஷாஅத்தே இஸ்லாம் செய்தால் போதுமோ? பிரான்ஸ்,

ருஷியா, ஜர்மனி, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் முதலிய நாடுகளில் இஷாஅத்தே இஸ்லாம் செய்யவேண்டாமா? அத்தேசங்களில் மட்டும் சன்மார்க்கப் பாவுதல் செய்வது போதாது; நமது இந்து தேசத்திலும், முக்கியமாய் இத்தென்னாட்டிலும் இஷாஅத்தே இஸ்லாம் செய்ய வேண்டும்.

முஸ்லிம்கள் என்பவர்கள் மகா அசுத்த முள்ளவர்கள், நூற்றுக்கணக்கான மனைவிகளை யுடையவர்கள், அறிவில்லாதவர்கள், அதர்வண வேதத்துக்கு உரியவர்கள், சூரிய பூஜை செய்பவர்கள், மக்கா ஷரீபுக்கு யாத்திரை போய் அங்கே மகாவிஷ்ணுவின் பாதத்தைப் பூஜிப்பவர்கள், அங்கே யிருக்கும் சிங்கத்தலை யொன்றை வணங்குகிறவர்கள் என்று பலவாருய்க் கிரிஸ்தவர்களும், ஹிந்துக்களும், இதர ஜாதியார்களும் நம்புகின்றனர். இப்படித் தப்பாக எண்ணுகிறவர்களுக்கு, நம் முஸ்லிம்கள் பரிசுத்தமான எண்ணமும் நடையும் உள்ளவர்களென்றும், அண்டகோளங்களுக்கெல்லாம் அரசாகிய ஏகதெய்வத்தையே அவர்கள் தொழுபவர்களென்றும், எமது வேதமும் ஒப்பற்ற தனித்திருவேதமென்றும், இது கடவுளால் அனுப்பப்பட்ட கசடற்ற வேதமென்றும், நம்மவர்கள் பெண்கள் விஷயத்தில் மகா உன்னத 'சட்ட ஒழுங்கை யுடையவர்களென்றும் நம்முடைய கடவுள், தூதர் (ரஸூல்), வேதம், நடை, உடை, பாவனை ஒவ்வொன்றும் மகா பரிசுத்தமானது என்றும் உலகம் அறிய எண்பிக்கவேண்டாமா? நமது சன்மார்க்கத்தின் பெருமைகளை எடுத்து விஸ்தரித்துச் சொன்னல் புத்திமானுன யார்தான் தீனுல் இஸ்லாம் சிறந்ததென்று ஒத்துக்கொள்ள மாட்டார்?

நம்முடைய இறைவன் இதர மதங்களில் இலக்ஷணிக்

கப்பட் டிருப்பதைக் காட்டினும் மகா பரிசுத்தம் பொரு ந்திய தனி முதற்கடவுளென்று எண்பிப்பதோடு நாமும் அறிவில் குறைந்தவரல்லவென்று உறுதிப்படுத்த வேண் டும். கடவுளைப்பற்றிய சித்தாந்தம் இஸ்லாத்தில்போல் வேறு மார்க்கங்களில் அவ்வளவு சிறந்ததாயில்லை யென் பது திண்ணம். எம்து குர்ஆன் ஷரீபைப்போல் அவ்வ ளவு பரிசுத்தமான இறைவன்கட்டளை வேறு ஜாதியாரின் வேதத்தில் இல்லையென்றும், சமத்துவம் சகோதரத்துவம் ஏகதெய்வக் கொள்கை முதலிய எல்லாம் இச்சன்மார்க்கத் தில்போல் வேறு மதங்களில் இல்லையென்றும் எடுத்துக் காட்ட நீங்கள் முன்வர வேண்டாமா? இதரமதக் குருமா ர்கள் தமது சுயநயத்தைக்கருதி நம்முஸ்லிம்களையும் நமது கொள்கைகளையும், திருவேதத்தையும், பெருநபியவர்களை யும் பழித்துக்கூறி மிகுதியாகப் புரட்டல் செய்துவிட்ட னர். இதையெல்லாம் சீர்திருத்தம் செய்வது நமது கட மையல்லவா? நாம் சும்மா இருப்போமாயின் நம்மைச் சூன் யத்தில் கொண்டுபோய் அழுத்திவிடுவார்கள் இதரமத எதிரிகள். இங்கிலாந்திலோ இஸ்லாம் இறைவனருளால் வேரூன்றி விட்டது. இஃதேபோல் இதரதேசங்களிலும் இஷா அல்லாஹ் இஸ்லாம் பரவவேண்டும். இதற்கு மனிதர் களும் திரவிய சகாயமும் வேண்டும். இக்காலத்தில் இஸ் லாத்துக்காக உழைக்கச் சிலர் முன்வந்திருந்தும் திரவிய சகாயம் செய்யப் பலர் முன்வரக்காணோம். இது என்ன பரிதாபம்! இஸ்லாத்தின் பரவுதலுக்காக அயல் நாடுகளுக் குச் சென்று அவர்கள் ஓயாமல் உழைக்கின்றனர்; அவர் களைப்போல் இன்னும் அநேகர் உழைக்க முன்வரவேண் டும்; இவ்வாறு உழைப்பவர்களுக்குத் திரவிய சகாயம் செய்யப் பலர் முன்வரவேண்டும். நமது இஸ்லாத்தின்

முன் ஏற்றத்தைக் காட்டினும் வேறு என்ன உங்களுக்கு அருமையான காரியம் இருக்கிறது?

ஐந்துவேளையும் கடவுளைத் தொழுது கொண்டுமட்டும் வந்தால் போதுமென்று அநேகர் நினைக்கின்றனர்; ஆனால் அல்லாஹுத் தஆலா தன் தனித்திருவேதத்தில் பின்வருமாறு விளக்கி யிருக்கிறான்:—"கிழக்குத்திசையை யேனும் மேற்குத்திசையை யேனும் நோக்கி உங்களுடைய முகங்களைத் திருப்பிவைத்துக் கொள்வது சற்குண சன்மார்க்கமாக மாட்டாது; ஆனால் ஒருவன் அல்லாஹுத் தஆலாவின்மீதும் கடைசிநாளின்மீதும் அமரர்களின்மீதும் வேதங்களின் மீதும் தீர்க்கதரிசிகளின்மீதும் நம்பிக்கைவைத்து, ஆண்டவன்மீதுள்ள அபிமானத்தால் தன்னுடைய சுற்றத்தாருக்கும் அனாதைகளுக்கும் பண உதவி வேண்டுவோருக்கும் வழிப்போக்கருக்கும் யாசகருக்கும் அடிமைகளை விடுதலை செய்வதற்கும் தன் திரவியத்தை அள்ளிக்கொடுத்து, தொழுகையையும் விடாமல் ஏழைவரியையும் கொடுப்பதுதான் சற்குண சன்மார்க்கமாகும்." ஆதலின் ஆண்டவனுக்கும் வணக்கம் செய்துகொண்டு நம் சன்மார்க்க சகோதரர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளையும் விடாமல் நிறைவேற்றினால்தான் சற்குண சன்மார்க்கர் என்னும் பேரை வகித்துக்கொள்ள நமக்கு உரிமையுண்டு. தானதர்மமில்லாத தேவவணக்கம் சன்மார்க்கமாக மாட்டாது. ஆதலின் நும்மாலியன்றதைக்கொடுத்து இஷா அத்தே இஸ்லாமுக்கு உதவிபுரிவீர்களென்று மிகத்தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறோம்.

...605 104

எமது கொள்கை

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத்தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றேம்.

"அல்லாஹுத் தஆலாவைத் தவிர மெய்யாக வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறு யாருமில்லையென அறுதியிட்டு உறுதி கூறுகின்றோம்; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை யாருமில்லை; மெய்யாக முகம்மது நபியவர்கள் (இவர்களுக்கு இறைவனருளும் அவன் நன்மாராயமும் உண்டாகுக) அவனுடைய அடியாரும் திருத்தூதரும் ஆவார்களென்றும் அறுதியிட்டு உறுதி கூறுகின்றோம்."

இதுதான் எமது கலிமா.—இது மகா பரிசுத்தமான ஒரு திருமந்திரம். இதை ஒருவன் மனஸால் நம்பி வாயால் உச்சரிப்பானாயின் அவன் இஸ்லாமார்க்கத்தில் சேர்ந்து விடுகிறான். பிறகு அவன் முஸ்லிமா அல்லவாவென்று சந்தேகிப்பதற்கு வேறெந்த முஸ்லிமுக்கும் அதிகாரமில்லை. ஒரு சமயம் இப்பரிசுத்தமான திருமந்திரத்தை ஒருவன் உச்சரித்தபின் அம்மனிதனைச் சரியான முஸ்லிம் அல்லவென்று சிலர் சந்தேகப்பட்டபோது எமது நபிகள் பெருமானார் அவர்கள், "நீங்கள் அம்மனிதனுடைய மனதைப் பிளந்து பார்த்தீர்களோ?" என்று கடிந்து, அப்படி ஒருவனைச் சந்தேகம் நினைப்பது தகாதென்று வற்புறுத்தி யிருக்கின்றார்கள். இவ்வாறு பெருமானார் திருவாக்கியம் அமைந்திருக்கும்போது இக்காலத்தில் ஒருவன் தான் இஸ்லாமென்று பகிரங்கப் படுத்தி மேலேசொன்ன திருமந்திரத்தை உச்-